**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.20/2016
Prosecution witness.01

| | |
|---|---|
| பெயர் : தனபால் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 27th day of July 2023.

27.07.2023

**குறிப்பு:** 1ம் எதிரி மூர்த்தி என்ற டவுசர் மூர்த்தி, 2ம் எதிரி நாடிமுத்து என்ற முத்து ஆகிய எதிரிகளுக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டு பிடியாணை நிலுவையில் உள்ளது. சாட்சி குவிமுச பிரிவு 299 மற்றும் குற்றவியல் நடைமுறை விதி 32(1)ன் கீழ் சாட்சி விசாரணை செய்யப்படுகிறார்.

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் மிட்டாய் வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 05.11.2015ம் தேதி மதியம் 12.00 மணியளவில் எனது மாமனார் தேவதாசனை அழைத்துக்கொண்டு அவரது ஓய்வூதியத்தை பெறுவதற்காக முதுகுளத்தூரில் உள்ள SBI வங்கிக்கு சென்று பணத்தை பெற்றுக்கொண்டு வங்கிக்கு வெளியே உள்ள பேருந்து நிறுத்ததில் எனது மாமனார் தேவதாசனை அமர வைத்துவிட்டு நான் இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டிருந்தேன்.

2) அப்போது அங்கு வந்த 2 நபர்கள் எனது மாமனார் தேவதாசன் முன்பாக 3 பத்து ரூபாய் நோட்டுகளை கீழே போட்டுவிட்டு எனது மாமனாரிடம் ஐயா உங்களது பணம் கீழே விழுந்து உள்ளது என்று கூறியவுடன் எனது மாமனார் குனிந்து அந்த பணத்தை எடுக்கும்போது அந்த 2 நபர்களும் எனது மாமனார் கையில் வைத்திருந்த பேக்யை எடுத்துக்கொண்டு இருசக்கர வாகனத்தில் சென்றார்கள். எதிரிகள் எடுத்து சென்ற பையில் எனது மாமனார் பெற்ற ரூபாய் 29,500/- ஓய்வூதிய பணமும், ரூபாய் 7,000/- பணமும், 5 பவுன் டாலர் செயினும், 3 பவுன் நெக்லஸ்யும், ஒரு ஜோடி சின்ன

தோடும், ஒரு ஜோடி கொலுசும், மோதிரமும் இருந்தது.

3) நானும், அங்கு இருந்தவர்களும் அந்த இருசக்கர வாகனத்தை விரட்டிச்சென்று பிடிக்க பார்த்தோம் முடியவில்லை. உடனே இதுகுறித்து முதுகுளத்தூர் காவல்நிலையத்திற்கு சென்றோம். எனது மாமனாருக்கு அப்போதைய வயது 82க்கு மேல் இருந்ததால் நான் தான் நடந்த சம்பவம் குறித்து புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** எனது மாமானாரிடம் பணத்தை பறித்த நபர்களை என்னால் பார்த்தால் தற்போது வெகுகாலம் ஆகிவிட்டதால் அடையாளம் காட்ட முடியாது. எனது மாமனார் நீதிமன்றத்திலிருந்து திருடப்பட்ட பொருட்களை மனு செய்து பெற்றுக்கொண்டார். எனது மாமனார் தேவதாசன் தற்போது உயிருடன் இல்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR</u>**

Case No.CC.20/2016
Prosecution witness.02

| | |
|---|---|
| பெயர் : செல்லத்துரை | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 27th day of July 2023.

<u>27.07.2023</u>

**<u>குறிப்பு:</u>** 1ம் எதிரி மூர்த்தி என்ற டவுசர் மூர்த்தி, 2ம் எதிரி நாடிமுத்து என்ற முத்து ஆகிய எதிரிகளுக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டு பிடியாணை நிலுவையில் உள்ளது. சாட்சி குவிமுச பிரிவு 299 மற்றும் குற்றவியல் நடைமுறை விதி 32(1)ன் கீழ் சாட்சி விசாரணை செய்யப்படுகிறார்.

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் மேலமுதுகுளத்தூர் கிராமநிர்வாக உதவியாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 05.11.2015ம் தேதி நானும், கிராமநிர்வாக அலுவலரும் அலுவலக பணிக்காக முதுகுளத்தூரில் உள்ள SBI வங்கிக்கு சென்றிருந்தோம். அப்போது முதுகுளத்தூர் ஆய்வாளர் அழைத்ததன் பேரில் நானும், கிராமநிர்வாக அலுவலரும் சென்றோம். அப்போது எங்கள் முன்னிலையில் ஆய்வாளர் பேருந்து நிறுத்ததில் இருந்து 3 பத்து ரூபாய் தாள்களை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் 1 முதல் 3 அத்தாட்சிகளில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **(அத்தாட்சி–I அசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2) பின்பு, இவ்வழக்கில் தொடர்புடைய 1ம் எதிரி மூர்த்தி காவல்நிலையத்தில் இருப்பதாகவும் 1ம் எதிரி மூர்த்தி ஒப்புதல் வாக்குமூலம் கொடுப்பதாக கூறியதன்படி நானும், கிராமநிர்வாக அலுவலரும் சென்றோம். 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல்

வாக்குமூலத்தின் அடிப்படையில் Honda Unicorn என்ற பெயருள்ள பதிவு எண். TN 46 L 6737 எண் கொண்டு கருப்புநிற மோட்டார் சைக்கிள் ஒன்றை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றியுள்ளார். அதைப்போல் ஒரு கருப்புநிற கைப்பை முதுகுளத்தூர் கடலாடி தாலுகா ஓய்வூதியர்கள் சங்கம் பதிவு எண்.48/93 முதுகுளத்தூர் 623704, 2014–2015 என்ற பெயர் உள்ள பையில் 1) 5 பவுன் டாலர் செயின், 2) 3 பவுன் பதக்கசெயின், 3) ஒரு பவுன் ஒரு ஜோடி ஜிமிக்கி தோடு, 4) ஒரு பவுன் ஒரு ஜோடி குண்டுத்தோடு, 5) 1/2 பவுன் மோதிரம், 6) சுமார் 1/4 பவுன் மோதிரம், 7) வெள்ளி கொலுசு 2 ஜோடி மற்றும் 8) பணம் ரூபாய் 36,500/–யை கைப்பற்றினார். **(அத்தாட்சி–II அசா.ஆ.3, அத்தாட்சி–III அசா.ஆ.4 மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் அசா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** என்னால் எதிரியை பார்த்தால் அடையாளம் காட்ட முடியும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

இல்லை.